மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

அசல் வழக்கு எண். 754/2019

**2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 18–ம் நாள் திங்கள் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தேவகி | தொழில் | : விவசாயம் |
| கணவர் பெயர் | : முத்துசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : மருவத்தூர் | வயது | : 57/2024 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) எனக்கு எழுதபடிக்க தெரியாது. கையொப்பம் போட தெரியும். எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். Os.691/2019 வழக்கில் இவ்வழக்கின் வாதி பழனிமுத்து ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்ன பரிகாரம் கோரியிருந்தோம் என்றால் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தோம். மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேல்முறையீடு செய்துள்ளோம். குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.